


## Womens Day Celebration

TIST India Organized Womens Day Celebration in Thiruvallur Disrict. Several women from TIST Small Groups and outside TIST Program too participated in the celebration.

1. A lecture on Women Rights was organized for the village dwelling women to know about their rights
2. Fun games were organized for the women to feel free and come out with their great ideas for the improvement of the program
3. Drawing competition was organized for girl children to display their talents and to encourage them on environment sustainability.
4. Women participants were honoured for their participation and displaying their talents in drawing competition and fun games.

## மகளிர் தின கொண்டாட்டம்

திருவல்லூர் மாவட்டத்தில் மகளிர் தின கொண்டாட்டத்தை TIST இந்தியா ஏற்பாடு செய்தது. TIST சிறு குழுக்கள் மற்றும் TIST திட்டத்திற்கு வெளியே உள்ள பல பெண்கள் இந்த கொண்டாட்டத்தில் பங்கேற்றனர்.

1. கிராமத்தில் வசிக்கும் பெண்கள் தங்கள் உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக பெண்கள் உரிமைகள் குறித்த விரிவுரை ஏற்பாடு செய்யப்பட்டது .
2. பெண்கள் தாராளமாக உணரவும், திட்டத்தின் முன்னேற்றத்திற்காக அவர்களின் சிறந்த யோசனைகளை வெளிப்படுத்தவும் வேடிக்கையான விளையாட்டுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன
3. பெண் குழந்தைகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை குறித்து அவர்களை ஊக்குவிக்கவும் வரைதல் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.
4. பெண்கள் பங்கேற்பாளர்கள் பங்கேற்றதற்காகவும், போட்டி மற்றும் வேடிக்கையான விளையாட்டுகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியதற்காகவும் அவர்கள் கௌரிக்கப்பட்டனர்

**TIST Tree Planting India Pvt. Ltd**
Flat A, Plot 69, 26th Street, Sankar Nagar, Pammal, Chennai 600075.
Mobile : 9840299822
Email: josephrexontist@gmail.com
Skype: a.joseph.rexon
Web: www.tist.org

The International Small Group & Tree Planting Program

TIST - Planting Trees and Improving Agriculture for Better Lives
டிஸ்ட், மரங்களை நடவு செய்தல் மற்றும் சிறந்த வாழ்க்கைக்கு விவசாயத்தை மேம்படுத்துதல்







Talent
திறமை

Display
காட்சி





 

## Apart from trees and conservative farming what else can be done in your land to get additional income?

One of the best practices is earthworm manure production, poultry farming for egg & meat, duck & other small bird keeping, beekeeping, silkworm production and breeding fish, any of these activities when carried out in your land you will get good income. To follow these activities, you need good training and information. Meet your TIST Coordinator in the Node meetings and ask for required training to carry out such good activities, they will help you.

Planting trees is a good practice. Planting useful trees will give you several benefits. The writeup on Sapota trees is given in Tamil.

## மரங்களை மற்றும் சிறந்த முறை விவசாயத்தை தவிர உங்கள் நிலங்களில் என்ன நல்ல காரியங்கள் செய்யலாம், கூடுதல் வருமானம் பெற ?

நல்ல செயல் முறைகளான மண்ப்புழு உரம் தயாரித்தல், முட்டை மற்றும் இறைச்சிகாக கோழி, வாத்து போன்ற பறவைகளை வளர்த்தல், தேனீ வளர்த்தல், பட்டுப்பூச்சி மற்றும் மீன் வளர்த்தல் போன்றவை கூடுதல் வருமானத்தை உங்களுக்கு பெற்று தரும். கண்டிப்பாக இந்த நல்ல முறைகளை ஆரம்பிப்பதற்கு நல்ல பயிற்சி மற்றும் விவரங்கள் தேவைப்படும். ஆர்வம் உள்ள குழுக்கள் உங்களது TIST பயிற்சியாளரை கணுக்கூட்டங்களில் சந்தித்து மேலே கூறிப்பிட்டுள்ள நல்ல காரியங்களை தொடங்குவதற்கு தேவையான பயிற்சி மற்றும் விவரம் தேவை என்று கேளுங்கள். அவர் உங்களுக்கு தேவையான உதவி அளிப்பார்.

மரம் நடவு செய்வது நல்ல ஒரு செயல் ஆகும், அதுவே பலன் தரும் மரங்களை நடவு செய்தால் இரட்டிப்பு நன்மை தரும். கீழே வரும் சப்போட்டா கனி மரம் சாகுபடி முறை தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது

## சப்போட்டா

சப்போட்டா பயிறு எந்த மண் வகை மண்ணிலும் செழித்து வளரக் கூடியது. நல்ல வடிகால் வசதியான மண் ஏற்றது. ஆழமான வண்டல் மண் கலந்த நிலங்கள் மிகவும் உகந்தது. சப்போட்டா ஓரளவு உப்புத் தன்மையுள்ள நிலங்களிலும் உப்புத் தன்மை கொண்ட நீரையும் தாங்கி வளரக்கூடியது. சப்போட்டா பருவக்காலம் ஜீலை  ஆகஸ்ட்.

## செடிகள் நடுதல்

சப்போட்டா பயிரிட 8 மீட்டருக்கு 8 மீட்டர் இடைவெளியில் 60 செ.மீ. நீளம், அகலம், 60 செ.மீ. ஆழம் என்ற அளவில் குழிகள் எடுக்கப்பட வேண்டும். குழிகளை சிறது நாட்களுக்கு ஆறவிடவும், 10 கிலோ மக்கிய தொழு உரம், ஒரு கிலோ, வேப்பம் புண்ணாக்கு, 10 கிராம் லிண்டேன் (1.3 சதவிகிதம் என்ற அளவில்) மற்றும் மேல் மண் காலங்களிலேயே செடிகள் நடப்படுதல் வேண்டும். செடிகள் நட்ட உடன், செடிகளுக்கு இருபுறமும் குச்சிகள் வைத்துக் கட்டுவதன் மூலம் காற்றில் செடிகள் ஆடிச் சேதமடைவதைத் தவிர்க்க வேண்டும்.

மகரந்தச் சேர்க்கை நல்ல முறையில் நடைபெற்ற, காய்கள் அதிகம் பிடிக்க, குறைந்த பட்சம் 2 அல்லது 3 மரங்கள் இருக்குமாறு பார்த்து நடவும். செடிகள் நட்ட சிறிது நாட்களுக்கு, 2 முதல் 3 நாட்களுக்கு ஒரு முறை பின்னர் 4 முதல் 5 நாட்களுக்கு ஒரு முறை என்ற அளவிலும் நீர் ஊற்ற வேண்டும். ஒரு வருடத்திற்குப் பிறகு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை என்ற அளவில் நீர் பாய்ச்சலாம். இப்பயிர் சிறந்த முறையில் வறட்சியைத் தாங்குவதால், மானாவாரிப் பயிராகவே பயிர் செய்யலாம்.

சாதாரணமாக செடிகள் நடும்போது இரசாயன உரம் எதுவும் இட வேண்டியதில்லை, ஒரு வயது முடிந்தபின், செடி ஒன்றுக்கு 200 கிராம் தழைச்சத்து, 200 கிராம் மணிச்சத்து மற்றும் 300 கிராம் சாம்பல் சத்து என்ற அளவிலும், இதையே வருடம் ஒன்றுக்கு 200:200:300 கிராம் என்ற அளவில் கூட்டி, 5 வருடங்களுக்கப் பிறகு, 1 கிலோ தழைச்சத்து, 1 கிலோ மணிச்சத்து மற்றும் 1.5 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் இட வேண்டும். மக்கிய தொழு உரம் ஒரு செடிக்கு 30 முதல் 50 கிலோ என்ற அளவில் இடுவது நல்லது.

மேற்படி உர அளவை, நீர்ப்பாசன வசதி உள்ள பகுதிகளில் கோடை காலத்தில் ஒரு முறையும், மழைக்காலத்தில் ஒரு முறையும் என இரண்டாகப் பிரித்து இடலாம். இதன் மூலம் செடிகளின் வளர்ச்சி சீராக இருப்பதோடு, உர சேதாரமும் தடுக்கப்படும்.

## களை கட்டுப்பாடு மற்றும் பின்செய் நேர்த்தி

- ஒட்டுப் பகுதிகளின் கீழே தழைத்து வரும் வேர்ச் செடியின் தளிர்களை அவ்வப்போது அகற்ற வேண்டும்.
- தரை மட்டத்திலிருந்து சுமார் 2 அடி உயரம் வரை கிளைகள் எதுவும் பிரியாமல் பார்த்துக் கொள்வது நல்லது. கிளைகள் மரத்தில் சீராகப் பரவி இருக்க வேண்டும்
- சப்போட்டா மரத்திற்கு கவாத்து செய்தல் தேவை இல்லை. ஊயரமாக வளரக் கூடிய ஒரு சில தண்டுகளை மட்டும் நீக்கிவிட வேண்டும். அடர்த்தியான, நிழல் விழும் கிளைகளையும் நீக்கி விடவும்.